013944

**சுருக்கம்**

பொதுப்பணிகள் – கல்வித் தகுதிகள் – காந்தி கிராமம் கிராமிய பல்கலைக்கழகம் வழங்கிய கிராமிய பட்டயப் படிப்பை (Diploma in Rural Services), கூட்டுறவு இளநிலை B.A., (Co-Operation) பட்டப் படிப்பிற்கு இணையாக அங்கீகரித்து – ஆணை – வெளியிடப்படுகிறது.

**நிதி (கூட்டுறவு தணிக்கை)த் துறை**

அரசாணை (நிலை) எண். 104

நாள்: 01.04.2013
நந்தன, பங்குனி – 19
திருவள்ளுவர் ஆண்டு, 2044

படிக்கப்பட்டது:

1. அரசு கடித எண்.59393/கூட்டுறவு தணிக்கை/2007, நாள் 03.02.2011.
2. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய கடித எண். 2211/வி.ம.அ.து. ஊ–1/2011, நாள் 21.11.2012

**ஆணை:**

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் காந்தி கிராமம் கிராமிய பல்கலைக்கழகத்தால் வழங்கப்படும் கிராமியப் பட்டயப் படிப்பை (Diploma in Rural Services) கூட்டுறவு இளநிலை பட்டப் படிப்பிற்கு B.A., (Co-Operation) இணையானதாக கருதலாமா என்பது குறித்து "**இணைக் கல்வி தகுதி நிர்ணயக் குழு**" முன் வைத்து தெளிவுரை வழங்குமாறு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் கேட்டுக் கொள்ளப்பட்டது.

2. மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசு கடிதத்தில், கோரியுள்ள பொருள் தொடர்பாக "**36வது இணைக் கல்வி தகுதி நிர்ணயக் குழு**" முன் சமர்ப்பிக்கப்பட்டு விரிவாக விவாதிக்கப்பட்டு தீர்மானம் எண் 6–ல் கீழ்க்கண்டவாறு நிறைவேற்றப்பட்டுள்ளதாக மேலே இரண்டவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் அரசுக்கு பரிந்துரை செய்துள்ளது.

| Name of the Subject | Resolution of the Meeting |
|---|---|
| தீர்மானம் : 6<br>பொதுப் பணிகள் – கல்வித் தகுதிகள் – காந்தி கிராமம் கிராமிய பல்கலைக்கழகம் – கிராமிய பட்டயப் படிப்பு (Diploma in Rural Services) – கூட்டுறவு இளநிலை பட்டம் B.A., (Co-Operation) இணையாக கருதுதல் – தொடர்பாக. | Recommended |

013944

3. "**36வது இணைக் கல்வி தகுதி நிர்ணயக் குழுவின்**" பரிந்துரையை அரசு தீவிர பரிசீலனைக்குப் பின் ஏற்று, அவ்வாறே காந்தி கிராமம் கிராமிய பல்கலைக்கழக கிராமிய பட்டயப் படிப்பை (Diploma in Rural Services) கூட்டுறவு இளநிலை பட்டப் படிப்பிற்கு B.A., (Co-Operation) இணையான கல்வித் தகுதியாக கருதலாம் என ஆணையிடுகிறது.

4. இது குறித்து தற்காலிக விதிகளில் தகுந்த விதி திருத்தம் வெளியிட பிரேரணை தனியாக அரசுக்கு அனுப்பி வைக்குமாறு கூட்டுறவு தணிக்கை இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**க.சண்முகம்,**
**அரசு முதன்மைச் செயலாளர்.**

**பெறுநர்:**
கூட்டுறவு தணிக்கை இயக்குநர், சென்னை–5.
செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை–03.
**நகல்:**
பணியாளர் (மற்றும்) நிருவாகச் சீர்திருத்தத் (எம்2) துறை, சென்னை–9.
பதிவாளர், காந்தி கிராமம் கிராமிய பல்கலைக் கழகம், காந்திகிராமம்,
திண்டுக்கல் மாவட்டம், தமிழ்நாடு.
முதலமைச்சர் அலுவலகம், தலைமைச் செயலகம், சென்னை–9.
நிதி அமைச்சரின் சிறப்புச் செயலாளர், நிதி அமைச்சர் அலுவலகம், சென்னை–9.
முதன்மைச் செயலாளரின் சிறப்புச் செயலாளர், நிதித் துறை, சென்னை–9.
கூட்டுறவு உணவு (மற்றும்) நுகர்வோர் பாதுகாப்புத் துறை, சென்னை–9.
கூட்டுறவு சங்கப் பதிவாளர், சென்னை.
இருப்புக் கோப்பு/உதிரி நகல்.

**ஆணைப்படி / அனுப்பப்படுகிறது**

1/4/13

**பிரிவு அலுவலர்.**

1/4/13